பாராட்டுத் தெரிவிப்பது என்று நீங்கள் பெரிய அளவில் ஆசைப் பட்டால், வெளியில் பெரிய அளவில் ஏற்பாடு செய்து எங்களையும் சேர்த்துக் கூப்பிட்டுப் பெரிய அளவில் பாராட்டு விழாவை நடத்திக் கொள்ளலாம். ஏற்கெனவே அறிவித்தபடி வினாக்கள் கேட்கிறபோது நன்றி அறிவித்தல், பாராட்டு அறிவித்தல் என்ற சொற்களை அருள்கூர்ந்து தவிர்க்க வேண்டுமென்றும், அதே நேரத்தில் 'நான் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்' என்று சொல்வதையும் விட்டுவிட்டு, 'தெரிந்து கொள்வதற்காக இந்த வினாவைக் கேட்கிறேன்' என்று சொல்கின்ற முறையில் வினா அமைப்பை வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

வினாக்கள்— விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையில் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. உரிமை மீறல் பிரச்சினை.

17–3–1990 ஆம் நாளன்று அ.இ.அ.தி.மு.க.வினர் வெளிநடப்புச் செய்த பிறகு நிதிநிலை அறிக்கையை முதல்வர் வாசித்தபோது அவையில் எதிர்க்கட்சித் தலைவரும் துணைத் தலைவரும் அமர்ந்திருப்பதாகத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப் பெற்றுள்ளது குறித்து.

*திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையினுடைய உரிமை மீறல் என்ற அடிப்படையில் விதி 219-ன் கீழ் ஒரு அவை உரிமை மீறல் பிரச்சினையை நான் எழுப்புவதற்காக உங்களிடத்தில் அனுமதியைக் கோரியிருக்கிறேன். நான் இந்த அவையில் உரிமைமீறல் பிரச்சினையை எடுத்துச் சொல்வதற்கு முன்னால் பேரறிஞர் அண்ணா அவர்கள் 13–11–1961-ல் இந்தச் சட்டமன்றத்தில் ஒரு கருத்தை வெளியிட்டார்கள். ''சட்டமன்றத்திலும் சரி, வெளியிலும் சரி, நீங்கள் எங்களை அழிப்பதற்குத் தீட்டிவரும் திட்டங்களை நாங்கள் அறிவோம். உங்களிடத்திலே கத்தி இருந்தால் அதைத் தீட்டிக் கொண்டு வாருங்கள். சட்டம் இருந்தால் அமல் செய்யுங்கள். நாங்களும் எங்கள் இரத்தத்தைச் சிந்தத் தயாராக இருக்கிறோம். எங்களுடைய கொள்கையில் எங்களுக்குள்ள உறுதியே எங்களுக்கு வெற்றியைத் தேடித் தரும்'' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் 1961 ஆம் ஆண்டில் இந்தச் சட்டமன்றத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இன்றைக்குப் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன**(மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் 219-ன் கீழ் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். தொலைக்காட்சி தொடர்பாக, அதை மட்டும் சொல்லுங்கள். அதைப் பற்றி ஏற்கெனவே திரு. உகம்சந்த் அவர்கள் என்னைச் சந்தித்துக் கொடுத்திருக்கிறார்கள். நாளைக்கு அது எடுத்துக் கொள்ளப்படும்.

(10.00 மணி)

திரு. எஸ். ஆர். இராதா: 219-வது விதியின் கீழ் நான் கொடுத்திருப்பதைத்தான் படித்துக்கொண்டிருக்கிறேன். ஆனால் அதற்குள் வேறு ஏதோ பிரச்சினையில் நான் பேசுகிறேன் என்று நினைக்கிறீர்கள். அல்ல. நான் அந்தப் பிரச்சினையில் பேசவில்லை. 17–3–90 அன்று கூடிய கூட்டத்தின் துவக்கத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கை தொடர்பான உரையை நிகழ்த்துவதற்கு முன் **

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் தங்களிடம் தரப்பட்டு தங்களுடைய ஆலோசனையில் அது இருக்கிறது. தாங்கள் அது குறித்து என்னிடத்திலே குறிப்பிட்டு இருக்கிறீர்கள். ஒத்திவைப்புத் தீர்மானம் தந்திருக்கிற திரு. உகம்சந்த் அவர்கள் நாளையதினம் அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவருவதாகக் கூறியிருக்கிறார்கள். அதை நாளையதினம் நீங்கள் அனுமதிப்பீர்களோ, இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனால் அதற்குப் பதில் அளிக்கிற வாய்ப்பு எனக்கு நாளைக்குத் தரப்படும் என்று கருதுகிறேன். ஆனால் இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அன்றைய தினம் இந்த அவையிலே எந்த அறிக்கையைப் படித்தார்களோ, எவை எல்லாம் அவைக் குறிப்பிலே ஏறாது என்று தாங்கள் சொன்னீர்களோ அவைகளை எல்லாம் மீண்டும் அவைக்குறிப்பிலே ஏற்றுகின்ற முயற்சியாக, அன்று படித்த அறிக்கையை மீண்டும் இங்கே நினைவூட்டுவது சரிதானா, முறைதானா என்பதைத் தாங்கள்தான் அறிவிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒன்றைக் கவனிக்கவேண்டும். நீங்கள் என்னிடத்தில் 219–வது விதியின் கீழ் கொடுத்தது தொலைக்காட்சி தொடர்பான ஓர் அறிவிப்புப் பற்றியது. எனவே தாங்கள் இதற்கு முன்னால் சொன்ன வாக்கியங்கள் அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகின்றன. நீங்கள் என்ன உரிமைப் பிரச்சினை கொடுத்தீர்களோ அதை மட்டும் சுருக்கமாகச் சொன்னால், விடை சொல்வதற்கு வாய்ப்பாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. எஸ், ஆர். இராதா: பேரவைத் தலைவர் அவர்களே, நான் எந்த நீக்கப்பட்ட பகுதியையும் இதில் சேர்க்க வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபடவில்லை. நாளைக்கு நீங்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்கிறீர்களா என்பது கூட எனக்குத் தெரியாது. எனறாலும் என்ன எழுதிக் கொடுத்தேனோ அதைத் தான் நான் படித்துக் கொண்டிருக்கிறேன். ஆனால், நீங்கள் ஏதோ . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். எழுதிக்கொடுத்திருப்பதை முழுமையாகப் படிக்க வேண்டும் என்பதில்லை. நீங்கள் கொடுத்திருக்கும் உரிமைப் பிரச்சினை என்ன ஆயிற்று என்று எது தொடர்பாகக் கொடுத்தீர்களோ அதன் மையக் கருத்தை மட்டும் சொன்னால் சரியாக இருக்கும். நாளை வருமேயானால் அப்போது விரிவாகப் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. உங்களுடைய உறுப்பினர் ஏற்கெனவே இது தொடர்பாக ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார். அது ஆய்வில் இருக்கிறது. எனவே, இப்போது உங்களுடைய உரிமைப் பிரச்சினையை மட்டும் குறிப்பிட்டால் சரியாக இருக்கும் மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் மாண்புமிகு அமைச்சராக இருந்தவர்கள். எனவே அதைச் சரியாக மையப்படுத்திச் சொல்வார்கள் என்று நம்புகிறேன்

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏதோ ஒன்றை, சபையில் நடக்காத ஒன்றை சபைக் குறிப்பில் ஏற்றுவதற்கு முயற்சிக்கிறேன் என்று சொன்னார்கள். நிச்சயமாக அந்த முயற்சியில் நான் ஈடுபடவில்லை, அந்த முயற்சியில் ஈடுபட வேண்டுமென்றால் நிச்சயமாக அதற்கான வழிமுறைகள் எனக்குத் தெரியும். ஆனால் அந்த முயற்சியில் நான் ஈடுபடவில்லை, நேற்று நடைபெற்றிருக்கிற நிதிநிலை அறிக்கை தொடர்பாக எடுக்கப்பட்டிருக்கிற தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரையில், இங்கே குறிப்பிடும்போது நாங்கள் இங்கே எதற்காக வெளிநடப்புச் செய்தோம் என்பதை இந்த உரிமைப் பிரச்சினையில் நான் கொடுத்திருக்கிறேன். அதிலே இருக்கிற இரண்டு வாக்கியங்களைத்தான் நான் படித்துக் கொண்டு இருக்கிறேன். அதற்குள்ளாக, அந்த வாக்கியங்கள் சபைக் குறிப்பில் ஏறிவிடுமே என்று சொன்னால். அவ்வாறு சபைக்குறிப்பில் ஏறுவதால் ஒன்றும் ஆகிவிடாது, நான் எழுதிக் கொடுத்திருப்பது இரண்டே இரண்டு வார்த்தைகள்தான். அது நாளையதினம் வரப் போகிறது. அது வேறு, ஆனால் நான் எழுதிக் கொடுத்திருக்கிற வார்த்தைகளைத்தான் படித்துக் கொண்டிருக்கிறேன். அவர்கள் உயிர் தப்ப முடியாத அளவுக்கு, உயிர்சேதம் ஏற்படக்கூடிய அளவுக்கு நிலைமை ஏற்பட்டு, உயிர் தப்பினார்கள் இந்தச் சம்பவம் திட்டமிட்டு செய்யப்பட்ட ** என்று மக்களும் நாங்களும் கருதுவதால் அதற்கு நீதி விசாரணை கோரி நானும், எங்கள் சட்டமன்ற உறுப்பினர்களும் வெளிநடப்புச் செய்தோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப் பெற்றது.

1990 மார்ச் 19] [திரு. எஸ். ஆர். இராதா]

அன்று தொலைக்காட்சியில் மாலையில் 7-30 மற்றும் 8-40 மணிச் செய்திகளில் சட்டமன்றத்தில் முதல்வர் அவர்கள் நிதி-நிலை அறிக்கை வாசிப்பது குறித்து ஒளிபரப்புச் செய்தார்கள், முதல்வர் பேச்சு தொடர சட்டமன்றக் காட்சிகளை ஒளி பரப்பும் நேரத்தில் நானும், திரு. திருநாவுக்கரசு அவர்களும் சட்டமன்றத்தில் உட்கார்ந்து இருப்பதைக் காட்டினார்கள். ஆனால் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்று. வெளிநடப்புச் செய்த நாங்கள் சட்டமன்றத்தில் உட்கார்ந்து இருப்பதாகக் காட்டு வதன்மூலம் எங்கள் பொதுச் செயலாளர் புரட்சித்தலைவி அவர்கள் லாரி வைத்துத் தாக்கப்பட்டது குறித்து நாங்கள் சட்டமன்றத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்தது போல் மக்கள் கருத இடம் ஏற்பட்டுள்ளது. இது எங்களை மிகவும் பாதிக்கக்கூடிய ஒன்றாகும், நாங்கள் வெளிநடப்புச் செய்துள்ள நிலையில் நாங்கள் சட்டமன்றத்தில் உட்கார்ந்திருப் பதாகக் காட்டுவதன் மூலம், சட்டமன்றத்தில் நடக்காத ஒன்றை உருவாக்கியது சட்டமன்ற உரிமைமீறல் செயலாகும் என்பது என்னுடைய அடிப்படைக் கருத்தாகும். இந்தக் கருத்தின் அடிப் படையில் டி.வி. நிலையம் இன்றைக்கு தன்னாட்சி பெறுகிற இந்த நேரத்திலே எப்படி வேண்டுமானாலும் காட்டலாம் என்ற ஒரு விதியை எடுத்துக்கொண்டு நடக்காத ஒன்றை நடத்தியதாக காட்டியிருக்கிறார்கள். சட்டமன்றத்தில் இருக்கிற நாங்கள் எங்களுடைய உரிமைகளைச் செய்திருக்கிறோம் என்பது தொடர் பான நிகழ்சியைக்கூட மறைத்து தொலைக்காட்சி நிலையம் அரசுக்கு ஆதரவாகச் செயல்படுகிற அந்த நிலையை கண்டிக்க வேண்டும்.

10-05 மணி

நேற்றைக்கு நிதிநிலை அறிக்கை வாசிக்கும்போது, பாதிக்கப்பட்ட எங்களுடைய புரட்சித் தலைவி அவர்களுடைய நிலைக்கு நீதி விசாரணை கோரி நாங்கள் வெளி நடப்புச் செய்திருக்கிறோம். எனவே வெளி நடப்பு செய்திருக்கிற எங்களை சட்டமன்றத்திலே காட்டுவது என்பது சட்டமன்றத்தில் நடக்காத ஒன்றை நடந்ததாகக் காட்டு வது உரிமை மீறலாகும். இதை நீங்கள் உரிமை மீறல் பிரச்சினை யாக எடுத்துக்கொண்டு, உரிமைக்குழுவிற்கு அனுப்பி நீதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்கட்சிதலைவர் அவர்கள் 219-ஆம் விதியின் கீழ் தந்திருக்கின்ற இந்த உரிமைப் பிரச்சினை குறித்து, தொலைக் காட்சித் துறையினருக்கு எழுதி, அவர்களுடைய விடையைப் பெற்று, இங்கு தீர்ப்பு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இது தொடர் பாக அவர்கள் பேசிய ** என்ற ஒரு சொற்றொடரை மட்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கி இப்போதைக்கு இந்தப் பிரச்சினை யில் முடிவுக்கு வருகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: நான் சொல்கின்ற ** என்றதை நீங்கள் ஒத்துக்கொண்டதாக நான் சொல்லவில்லை. நான் என்னுடைய

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

கருத்தைச் சொல்கிறேன். என்னுடைய கருத்தைக்கூட நீங்கள் சட்டமன்றத்திலே ஏற்றுகொள்ளமாட்டீர்கள் என்பது நிச்சயமாக

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்கட்சி தலைவர் அவர்கள் ஒன்றைக் கருத வேண்டும். நீங்கள் கொடுத்திருப்பது தொலைக் காட்சி பற்றி. ஒரு செய்தியைச் சொல்லியிருக் கிறீர்கள் அவர்கள் சட்டமன்றத்தில் முதல்வர் வரவு செலவுத் திட்டத்தைப் படிக்கின்றபோது நீங்கள் இருந் ததாகக் காட்டி, ஒரு இயைபு படுத்தியிருப்பது தவறு உரிமை மீறல் என்று சொல்லியிருக்கிறீர்கள். அது தொடர்பான செய்தியை நான் எடுத்துக்கொண்டிருக்கிறேன். தொலைக் காட்சி துறையினருக்கு எழுதிக்கேட்டு தீர்ப்பு வழங்குவதாகச் சொல்லி யிருக்கிறேன். ஆனால் நீங்கள் சொன்ன ** என்பது இந்த உரிமை மீறல் பிரச்சினைக்குத் தொடர்பற்ற ஒரு தொடர் என்ற காரணத்தினால் தான் நீக்குகிறேன். அது தொடர்பான பிரச்சினையை எடுத்துக் கொள்கின்ற போது நீங்கள் சொல் கின்றபோது அதற்குத் தகுந்த முறையில் இந்த அவை உங்களு டைய உரிமைக்குப் பாதகம் இல்லாத வகையில் வாய்ப்பளிக்கும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: நான் சொல்வதையே நீங்கள் அனுமதிக் கவில்லை என்று சொன்னால், நீங்கள் அதிலே ஏதோ சம்பந்தம் இருபபது போன்ற வெளியிலே ஒரு தோற்றம் வரும். நான் என்னுடைய (குறுக்கீடு)....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுபோன்ற தவறான முயற் சியில் ஈடுபட மாட்டீர்கள் என்று கருதுகிறேன். ஏற்கனவே இது தொடர்பாக ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தை உங்கள் கட்சி கொடுத்திருக்கிறது. இது தொடர்பாக ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்த உங்கள் கட்சியைச் சார்ந்த திரு. உகம்சந்த் அவர்களுக்கு விடை சொல்லப்பட்டிருக்கிறது. அந்த விடையைப் பொறுத்து நீங்கள் அப்போது விவாதிக்கின்றபோது உங்களுடைய முழுக் கருத்தையும் தெரிவிப்பதற்குக் கண்டிப்பாக இந்தச் சட்ட மன்றத்திலே வாய்ப்பு உண்டு. உங்களுடைய முழு ஆற்றலையும் நீங்கள் அப்போது வெளியிட்டுக் கொள்ளலாம். இப்போது அல்ல.

4. தக்வல் கோரல்

வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே பதிவு செய்தவர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் அளிக்க வேண்டியது குறித்து.

திரு .மா. சுந்தரதாஸ்: பல ஆண்டுகளாக இளைஞர்கள் வேலை வாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்திருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு எந்த கார்டும் கொடுக்காமல் இப்போது இந்த அரசு கிராமங்களில்....

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.